மாண்புமிகு திரு. கே. எ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

திருச்சிராப்பள்ளியிலுள்ள சிம்கோ இஞ்சினியரிங் லிமிடெட் என்ற நிறுவனத்தில் 1985-86 ம் ஆண்டிற்கான போனஸ் பிரச்சினை தொடர்பாக 3-11-86 முதல் சில அசம்பாவித மான காரணங்களினால் பணி நிறுத்தி வைக்கப்பட்டது. பின்னர் தொழிலாளர் துறை சிறப்புத்துணை ஆணையர் அங்குள்ள நான்கு தொழிற் சங்கங்களுடனும்—1. சிம்கோ மீட்டர்ஸ் ஒர்க்கர்ஸ் யூனியன் (ஐ.என்.டி.யூ.சி) 2. சிம்கோ மீட்டர்ஸ் லேபர் யூனியன், (சி.ஐ.டி.யூ), 3. இஞ்சினியரிங் அண்ட் ஜெனரல் ஒர்க்ஸ் புராகிரசிவ் யூனியன் (டி.எம்.கே.) 4. சிம்கோ மீட்டர் ஸ்டாப் யூனியன் (சி.ஐ.டி.யூ.) மற்றும் நிர்வாகத்தினருடனும் 7.11.86 மற்றும் 10.11.86 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகளின் பயனாக ஒரு உடன்பாடு ஏற்பட்டது. அதன் அடிப்படையில் தொழிலாளர் துறை துணை ஆணையர் நிர்வாகத்தினருக்கும் தொழிற்சங்கங்களுக்கும் அறிவுரைகள் வழங்கியுள்ளார். அதன் பயனாக தொழிலாளர்கள் 14.10.86-க்கு முன்பாக இருந்த நிலைக்கு உற்பத்தியைக் கொண்டு வருதல் என்றும் எல்லா வகையிலும் நிறுவனத்தில் ஒழுங்கு முறைகளை காப்பதென்றும், நிர்வாகம் பணி நிறுத்தி வைப்பினை நீக்கி 12.11.86 முதல் நிறுவனத்தில் பணி மேற்கொள்ளப்பட வேண்டு மென்றும் முடிவு செய்யப்பட்டது. மேலும் 1985-86-க்கான போனஸ் மற்றும் தொழிற்சாலையை நிறுத்தி வைத்ததினால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளையும், 2 மாதத்திற்குள் தொழிலாளர் துறை தனித் துணை ஆணையர் முன்பு பேசி சுமுகமான முறையில் முடித்துக்கொள்வது என்றும் முடிவு எடுக்கப்பட்டது. இதனை இரு தரப்பினர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். நிறுவனத்தில் தற்போது பிரச்சினை ஏதுமில்லை. 12.11.86 முதல் பணி தொடங்கப்பட்டு தொழிற்சாலையில் சகஜ நிலை திரும்பியுள்ளது.

(ஊ) கரும்புக்கு கட்டுபடியான விலை கோரி விவசாயிகள் உண்ணாவிரதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே. சுப்பராயன் பொ. உத்திராபதி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

மைய அரசு 1985-86 ஆம் பருவத்திற்கு 8.5% சர்க்கரை கட்டுமானமுள்ள கரும்பிற்கு குறைந்தபட்ச விலையாக டன் ஒன்றுக்கு ரூ 165 என அறிவித்தபோதே 1986-87 ஆம் பருவத்திற்கும் 8.5% சர்க்கரை கட்டுமானமுள்ள கரும்பிற்கு குறைந்த பட்ச விலையாக டன் ஒன்றுக்கு ரூ. 170 என விலை நிர்ணயம் செய்துள்ளது.

2. 1982–83 முதல் 1985–86 வரை மைய அரசு கரும்பிற்கு டன் ஒன்றுக்கு அடிப்படை விலைகளை கீழ்க்கண்டவாறு நிர்ணயித்துள்ளது :

		ரூபாய்
1982–83	..	130
1983–84	..	135
1984–85	..	140
1985–86	..	165
1986–87	..	170

மேலே உள்ள விவரங்களினால் 1982–83 முதல் 1984–85 வரை ஆகிய இந்த 3 ஆண்டுகளிலும் ஆண்டுக்கு ஆண்டு ரூ. 5 தான் விலை நிர்ணயம் உயர்ந்துள்ளது. ஆனால், கடந்த ஆண்டுதான் (1985–86) மைய அரசு முந்தைய ஆண்டைவிட ரூ. 25 அதிகமாக நிர்ணயித்துள்ளது.

3. தமிழ்நாட்டில் (1985–86)-ல் கரும்பு பயிர் செய்ய டன் ஒன்றுக்கு ஆகும் செலவு ரூ.173.06 என்று கணக்கிடப்பட்டுள்ளது.

4. தமிழக கரும்பு விவசாயிகளின் கோரிக்கைகள் மற்றும் தென் இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம் விடுத்துள்ள கோரிக்கையையும், தமிழ்நாட்டில் கரும்பு உற்பத்தி செய்ய விவசாயிக்கு ஆகும் செலவையும் கருத்தில் கொண்டு சென்ற ஆண்டு மைய அரசு அறிவித்த சட்ட பூர்வ குறைந்தபட்ச விலை டன் ஒன்றுக்கு ரூ. 165 உடன் தமிழக அரசு கூடுதலாக டன் ஒன்றுக்கு ரூ. 30 வழங்க ஆணையிட்டது. 1986–87ஆம் ஆண்டில் மைய அரசு அறிவித்துள்ள கரும்பு விலை டன் ஒன்றுக்கு ரூ. 170 ஆகும். சென்ற ஆண்டைப்போல் கூடுதலாக டன் ஒன்றுக்கு ரூ. 30 மாநில அரசு அளித்து ஆணையிட்டதால் 1986–87 ஆம் ஆண்டிற்கு 8.5 சதவீத சர்க்கரை கட்டுமானமுள்ள கரும்பின் விலை டன் ஒன்றுக்கு ரூ. 200 என ஆகும்.

5. தமிழ்நாட்டில் 1985–86 ஆம் ஆண்டில் சர்க்கரை ஆலைகள் அடைந்த உச்சபட்ச கட்டுமானம் 10.12% ஆக இருந்தது. இந்த உச்ச அளவு கட்டுமானத்துடன் இணைத்தால் கரும்பு விவசாயிகள் சராசரியாக டன் ஒன்றுக்கு ரூ. 230-க்கு மேலாகவே பெறுவார்கள்.

6. கரும்பு பயிரிடும் விவசாயிகளின் நலன்களை கருத்தில் கொண்டும் மற்றும் தமிழக சர்க்கரை ஆலைகள் நன்றாக செயல்பட வேண்டும் என்ற நோக்கத்துடனும் அரசு கரும்பு விலையை மேற்கண்டவாறு அறிவித்துள்ளது.

(எ) திருப்பூர் பனியன் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவு நீரால் பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு வி. தங்கவேலு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு ஒன்றினைக் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

திருப்பூரிலும் அதைச் சுற்றிலும் உள்ள நூல் மற்றும் துணி செய்முறைப்படுத்தும் தொழிற்சாலைகள் சிறிய தொழிற்சாலைகளாகவோ அல்லது மிகச்சிறிய தொழிற்சாலைகளாகவோ விளங்குகின்றன. செய்முறையில் வெளுப்புத் திரவம், எரிகாரம், ஹைட்ரோ-குளோரிக் அமிலம், கந்தக அமிலம், ட்ரை-சோடியம், ஃபாஸ்ஃபேட், ஹைட்ரஜன் பெராக்ஸைட், உப்பு பல்வேறு சாயங்கள் முதலியன மூலப்பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றன. நூல்/துணிகள் வெளுப்பேற்றி, பெருகூட்டி சாயமிடப்பட்டு செய்முறையில் வெளிப்படுத்தப்படும் கழிவுநீரானது கரையாத திடப்பொருள்களையும், மிதக்கும் திடப்பொருள்களையும், இரசாயன உயிரகத் தேவையும், உயிரக இரசாயன உயிரகத் தேவையும் இன்னும் பலவும் கலந்து இயல்பாகவே சாரத்தன்மை உள்ளது. திருப்பூரிலுள்ள அநேக தொழிற்சாலைகள் தமது தொழிற்சாலை கழிவுநீர் மற்றும் பிற கழிவு நீரை நிலத்திலும், நொய்யலாற்றை நோக்கி ஓடும் நீரோடைகளிலும் வெளியேற்றுகின்றன.

1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் 26 ஆவது பிரிவின்படி அனைத்துத் தொழிற்சாலைகளும் தொழிற்சாலைக் கழிவுநீர்/மற்றும் பிற நீரை வெளியிடுவதற்காக வாரியத்தின் அனுமதியைப் பெற வேண்டும்.

இதுவரை திருப்பூர் மற்றும் அதைச் சுற்றியுள்ள 72 தொழிற்சாலைகள் 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின்படி வாரியத்தின் அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளன. 41 தொழிற்சாலைகளுக்கு அனுமதி